**24-12-2011** **கிறிஸ்மஸ் காலம்**

# பூமியின் மேல் சமாதானம்
## PEACE OF EARTH

ஏசாயா 9:2-9 Iதீமோ. 3:1-6
தி.பா. 89:14;19-29 லூக்கா 2:1-14

*''அவர் திருப்பெயரோ............'அமைதியின் அரசர்' என்று அழைக்கப்படும்.'' ஏசா. 9:6*

**மன்றாட்டு :** *எங்கள் மீட்பரான கடவுளே, எங்களையும் முழு படைப்பையும் மீட்டு தூய்மைப்படுத்த இயேசுகிறிஸ்துவை அருட்கொடையாக்கினீர். அவரை ஆண்டவராகவும், மீட்பராகவும் அனுபவித்தறியவும், மீட்பின் மகிழ்வை எங்கள் வாழ்வில் வழங்கவும் என்றும் உம்மோடும், தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆளுகை செய்யும் இயேசுகிறிஸ்து வழி மன்றாடுகிறோம். - ஆமென்.*

சமாதானம் இல்லாத மன்னன் ஞானி ஒருவரை சந்தித்து ''நான் சமாதானமற்று அலைந்துக் கொண்டிருக்கிறேன். நான் எப்படி உண்மையான சமாதானத்தை பெற்று கொள்ளுவது?'' என்று கேட்டான். அதற்கு அந்த ஞானி நன்கு யோசித்து விட்டு ''உன் நாட்டில் கவலையே இல்லாமல் சமாதானமாய் வாழும் மனிதன் ஒருவனை கண்டுபிடித்து அவனின் சட்டையை 24 மணி நேரம் அணிந்து கொள், அப்பொழுது சமாதானம் பெறுவாய்'' என்றார். உடனே சேவகர்கள் கவலையே இல்லாமல் சமாதானமாய் வாழும் மனிதனை கண்டுபிடிக்க குதிரைகளில் சென்றனர்.

ஏறத்தாழ 3 மாதங்கள் கழித்து சேவகர்கள் மன்னனிடம் வந்து ''மன்னா, கவலையே இல்லாமல் சமாதானமாய் வாழும் மனிதன் ஒருவனை கண்டு பிடித்துக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், அணிந்து கொள்ள அவனுக்கு சட்டை இல்லை'' என்றார்.

இப்படித்தான் அனைத்துமிருந்தும் இன்று சமாதானமிலாமல் ஏங்கும் மக்கள் பலரை பார்த்திருக்கிறோம். இம்மன்னனைப் போல் சமாதானத்திற்கான ஏக்கம் இன்று உலகம் முழுவதையும் பற்றி பிடித்திருக்கிறது. அதாவது காந்தியடிகள் அன்று ஊன்றி நடந்த அகிம்சை என்னும் ஊன்று கோலை இன்று உலகம் தேடுகிறது. மேலும், தென் அமெரிக்க விடுதலையாளர் மார்ட்டின் லூதர் கிங் கற்று தந்த அறவழியை இன்று உலகம் தேடுகிறது. இச்சூழலில் ஏசாயா இறைவாக்கினர்

முன்னறிவிக்கும் அமைதியின் அரசர் இயேசு கிறிஸ்து பகிர்ந்தளிக்கும் சமாதானத்தை நாம் சிந்திக்க அழைக்கப்படுகிறோம். உலகின் மன்னர்களும் தலைவர்களும் கொண்டு வரும் சமாதானம் தற்காலிகமானது. அது தொலைந்து போகும். பன்னெடுங்காலமாக, சமாதான குறைவு நிறைந்த இப்பூவுலகில் இயேசு கிறிஸ்து மட்டுமே சமாதானத்தின் மையமாக இருக்கிறார். எனவே 'சமாதான பிரபு' என தீர்க்கன் ஏசாயாவால் அழைக்கப்பட்ட 'சமாதான காரணா' என் தீர்க்கன் மீக்காவால் முன்னறிவிக்கப்பட்ட சமாதான கிறிஸ்து தரும் சமாதானத்தின் படி நிலைகளை சிந்திப்போம்.

## 1. அமைதியற்ற சூழலில் சமாதானம் தருகிறார்

போராட்டம் இல்லாத வாழ்க்கை என்பது சமாதான வாழ்வல்ல. மாறாக கொந்தளிப்புக்களின் மத்தியிலும் பயப்படாமலும், திகிலடையாமலும் இருக்கும் நிலைதான் சமாதானம். அதாவது நமது வாழ்க்கை கொந்தளிப்பு நிறைந்த அனுபவத்திலிருந்தாலும் இறைசமாதானம் நம்முடனிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தீர்க்கன் ஏசாயா இதைக் குறித்து விளக்கும் போது "மலைகள் நிலை சாயினும், குன்றுகள் இடம் பெயரினும் உன் மீது நான் கொண்ட பேரன்போ நிலை சாயாது. ஏன் சமாதான உடன்படிக்கையோ அசைவுறாது.." என்கிறார். சிறந்த ஆன்மீக நூலாசிரியர் என்று பெயர் பெற்ற பியர்ஸன் "அனைத்து விதமான உலக சூழல்களிலும் இறைவனை நோக்கி மன்றாடி, அவன் மீது ஆழமான நம்பிக்கை வைக்கிற மனிதனின் உள்ளத்தில் ஆழத்தில் கிடக்கிற அமைதியே சமாதானம்" என்கிறார்.

அன்று இயேசுவின் சீடர்களுக்கு கொந்தளிக்கும் சூழல் உருவானதற்கு காரணம் (மத். 6:45-51) இயேசு நாதரை விட்டு விட்டுக் கடலில் பெத்சாயிதாவுக்கு நேராக பயணம் மேற்கொண்டனர். ஆனால், தொடர முடியாதபடி எதிர்காற்று வீசி பயணத்தை அலைக்கழித்தது, அவர்களின் சமாதானத்தைக் குலைத்தது. சமாதானம் வேண்டும் என்ற ஏக்கம். இயேசு கடந்து வந்து கொந்தளிக்கும் கடலை அடக்கி சமாதானம் கட்டளையிட்டார். சீடர்களின் சமாதானமில்லா பயணத்துக்கு காரணம் இயேசுவை கரையிலே விட்டு சென்றனர். நாமும் பல வேளைகளில் இயேசுவை தனியே விட்டு விட்டு சுய பலத்தை, சுய அறிவை நம்பி விடுகிறோம். விளைவு கொந்தளிப்பு.

இத்தகைய கொந்தளிப்பின் சூழலிலிருந்து மக்களுக்கு தீர்க்கன் ஏசாயாவின் கூற்று ஏசாயா 26:3 "அவர்கள் மன உறுதி கொண்டவர்கள்.

உம் மீது நம்பிக்கை உடையவர்கள், அவர்களை அமைதியால் நீர் உறுதிப்படுத்துகின்றீர்'' இயேசுவின் அடியவர்களாக வாழ வேண்டுமென்றால் கிறிஸ்துவைப்போல துன்பத்தை தாங்கக் கூடியவர்களாகவும், உண்மையான சமாதானத்தை நிலை நாட்டக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

## 2. அமைதியின் கருவிகளாக மாற்றுகிறார்

இறைமகன் இயேசு நம் வாழ்வில் சமாதானத்தின் உறைவிடமாக இருக்கிறார். மட்டுமல்ல பிறருடைய சமாதானத்திற்காக செயல்படும் படியும் அழைக்கிறார் ''ஷாலோம் ''என்கிற எபிரேய சொல் தமிழில் சமாதானம் என மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இச்சொல் பழைய ஏற்பாட்டில் ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் உறவு சார்ந்த பொருளாக கொள்ளப்படுகிறது. ஒரு எபிரேயன் மற்றவரை சந்திக்கும்போது இவ்வார்த்தை பயன்படுத்துவார்களாம். இதன் பொருள் என்னவென்றால் தான் மட்டுமல்ல, மற்றவர்களும் சமாதானமாக இருக்க வேண்டுமென்பதே. ஆகவே தான் இயேசு தனது மலைப்பொழிவில் மத்தேயு 5:9-ல் ''அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்'' என்று கூறினார்.

கிறிஸ்து நம்மில் எதிர்பார்க்கும் அமைதி ஏற்படுத்துதல் என்பது பயத்தினால் அல்லது மிரட்டலினால் ஏற்படுத்தும் அமைதியல்ல. ஏனென்றால், அது வெளிப்படையாக தோன்றுவது மட்டுமே. உள்ளே புகைச்சலும், வெறுமையும், கோபமும், மகிழ்ச்சியற்ற தன்மையும் குடிக்கொண்டிருக்கும். மாறாக, நீதியில் கனியும், மானிட உரிமையில் பிறக்கும் நேயத்தையும், அநீதிகள் ஒழிந்த வாழ்வையும் சார்ந்த சமாதானம் நம்மிலே கனியவே நம்மில் ஆண்டவர் விரும்புகிறார். சமாதானத்தின் அரசராக விளங்கும் கிறிஸ்து கூறும் நீதியில் கனியும் அமைதியை நாமும் பெற்று ''அமைதியின் கருவியாய் ஆண்டவா அடியேனை அனுதினம் உருவாக்கிடும்''என்ற வேண்டுதலோடு செயல்பட்டு அமைதியின் அரசரை உள்ளத்தில் வரவேற்க ஆயத்தமாவோம்.

அருள்திரு. **ஜாண் A. ஸ்மித்**